https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

17th MARCH 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 71



நாடாளுமன்றத் தேர்தல்தான் முதலில் நடக்க வேண்டும்...

06



# நாடாளுமன்ற தேர்தலை நடத்த 113 கேட்கும் ஜனாதிபதி

ஜனாதிபதி தேர்தலுக்கு முன் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதாக இருந்தால் அது தொடர்பில் நாடாளுமன்றில் கொண்டுவரப்படும் யோசனைக்கு 113 எம்பிக்கள் ஆதரவு வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மொட்டு கட்சி முக்கியஸ்தர்களிடம் கூறியுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்துமாறு மொட்டு எம்பிக்கள் இப்போது

02



# நாடாளுமன்ற தேர்தலே வேண்டும்

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் நாடாளுமன்றத் தேர்தலே நடாத்தப்பட வேண்டும் என்று மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது மொட்டு கட்சியின் நிலைப்பாடு அல்ல என்றும் தனது தனிப்பட்ட கருத்தே என்றும் கூறியுள்ள மஹிந்த முதலில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்திவிட்டு பின்பு ஜனாதிபதி தேர்தலை நடத்துவதில் சட்டப் பிரச்சினை எதுவும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அரசின் முக்கியஸ்தர்களுடன் பேசி எந்தத் தேர்தலை நடத்துவது என்ற முடிவை மக்களுக்கு அறிவிப்போம் என்றும் கூறியுள்ளார்.

# நாடாளுமன்றத் தேர்தலுக்கு ஜேவிபி எதிர்ப்பு



நாடாளுமன்றத் தேர்தல் அன்றி ஜனாதிபதி தேர்தலே முதலில் நடத்தப்பட வேண்டும் என்று ஜேவிபி தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்தும் யோசனை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டால் அதை எதிர்ப்பதென்று அக்கட்சி முடிவெடுத்துள்ளது.

மேலும்,எக்காரணம் கொண்டும் ஜனாதிபதி தேர்தலை ஒத்திப்போட முடியாது என்றும் உரிய நேரத்தில் நடத்தப்பட்டே ஆக வேண்டும் என்றும் ஜேவிபியின் பொது செயலாளர் டில்வின் சில்வா கூறியுள்ளார்.



# சு.க கூட்டணி: சந்திரிகா சைலண்ட்

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையில் கதிரைச் சின்னத்தை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்டவுள்ள அரசியல் கூட்டணிக்கு தலைமை தாங்குவது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

02



புதுசுடர்
www.puthusudar.lk
2024 MARCH 17 - SUNDAY

# விரட்டல் நிச்சயம்

இலங்கையின் அரசியல் அரங்கில் இன்று அனைத்து அரசியல் கட்சிகளும் பிஸியாகிவிட்டன.அதற்குக் காரணம் இந்த வருடம் இடம்பெறவிருக்கின்ற ஜனாதிபதி தேர்தல்.

கட்சி தாவல்–கூட்டணி அமைத்தல்–ரகசிய சந்திப்பு என்று பரபரப்பாகிவிட்டன அரசியல் அரங்கு.

இந்தத் தேர்தலை அதிக ஆர்வத்துடன் எதிர்பார்த்திருப்பது எதிர்கட்சிகள்தான்.அவர்களுக்குத்தான் வாசி அதிகம்.இப்போதே தேர்தல் பிரச்சாரங்களுக்கு இணையான பொதுக் கூட்டங்கள் நாடு பூராகவும் சூடு கிளப்பத் தொடங்கிவிட்டன.

அரச தரப்பு மண் கவ்வும் நிலைதான்.இருந்தாலும்,ஆட்சியை வீட்டுக் கொடுப்பதற்கு அவர்கள் தயாரில்லை.இதனால் எதையாவது செய்து ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றன மொட்டு கட்சியும் ஜனாதிபதி தரப்பும்.

அவர்கள் வெற்றிக்கான கருவியாக இப்போது சிந்திக்கத் தொடங்கியது நாடாளுமன்றத் தேர்தலைத்தான்.அதை முதலில் நடத்தி தோல்வியடைந்தாலும் ஏனைய கட்சிகளில் இருந்து எம்பிக்களை விலைக்கு வாங்கி நாடாளுமன்ற ஆட்சியை அமைத்துவிடலாம் என்று அரசு கருதுகிறது.

இந்த விடயம் இப்போது அரசுக்குள் தீவிரமாக சிந்திக்கப்படுகிறது.

அதற்குக் காரணம் பசில் ராஜபக்சவின் வருகைதான்.

பசில் அமெரிக்காவில் சும்மா ஓய்வில் இருக்கவில்லை.அவர் அங்கிருந்துகொண்டு இலங்கையின் அரசியல் தளத்தை மிகவும் உன்னிப்பாக அவதானித்தார்.

கிராமங்களில் உள்ள மொட்டு கட்சி நிர்வாகிகளின் ஊடாக களநிலவரத்தை அறிந்துகொண்டார்.மொட்டு கட்சிக்கு எந்தளவு செல்வாக்கு இருக்கிறது என்பதையும் அறிந்துகொண்டார்.

அந்தவகையில்,வெறும் 20 வீதம் அளவிலான செல்வாக்குதான் மொட்டுக்கு இருக்கிறது.இதை வைத்துக்கொண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெல்ல முடியாது.

அதைவிட,நாடாளுமன்றத் தேர்தலை நடத்தினால் மேலே குறிப்பிட்டதுபோல் தோல்வியடைந்தாலும் எம்பிக்களை வாங்கி நாடாளுமன்ற ஆட்சியைப் பிடிக்கலாம்.

நாடாளுமன்ற ஆட்சி கையில் இருப்பதால் ஜனாதிபதி தேர்தலுக்குச் சென்றால் இலகுவாக வென்றுவிடலாம் என்று பசில் கருதுகிறார்.

இதற்கான வேலைத் திட்டத்தைத் தொடக்கி வைப்பதற்காகவே பசில் அமெரிக்காவில் இருந்து இலங்கை வந்துள்ளார்.அவர் நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்துவதற்கு ஆதரவாகப் பேசி வருவதைக் காணலாம்.

அவர்களின் கையாலேயே நாசமாக்கிய நாட்டை மீண்டும் மீண்டும் நாசமாக்குவதற்கான முயற்சிதான் இது.முதலில் வருவது நாடாளுமன்றத் தேர்தலோ, ஜனாதிபதி தேர்தலோ எந்தத் தேர்தலாக இருந்தாலும் இந்த அரசை விரட்டுவது என்பதில் மக்கள் உறுதியாகவே உள்ளார்கள்.

மீண்டும் ஒரு தடவை மக்கள் ஏமாறுவதற்குத் தயாரில்லை.வீழ்ந்த நாட்டைத் தூக்கி நிமிர்த்தது அதன்மேல் ஏறி நின்றுதான் மக்களிடம் வாக்குக் கேட்டுச் சொல்லப் போகிறார்கள்.

இவர்களால் ஏற்படுத்தப்பட்ட மக்களின் பிரச்சினைகளை இவர்கள் இன்னும் தீர்க்கவில்லை.ஆனால்,பிரச்சினை தீர்ந்துவிட்டதாக இவர்கள் கூறுகிறார்கள்.

இந்தப் பொய்யெல்லாம் இனியும் எடுபடாது.மக்கள் இவர்களை விரட்டுவது என்ற தீர்மானத்தை கோத்தா விரட்டப்பட்ட சந்தர்ப்பத்திலேயே எடுத்துவிட்டார்கள்.

# கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட அடிப்படையில் தொடர்ந்தும் முஸ்லிம் அதிகாரிகளுக்கு வெட்டு!

## இம்ரான் எம்.பி கவலை



(அபு அலா)

கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் அதிகாரிகளுக்கெதிரான விரோதப் போக்கு தொடர்ந்து வருகின்றது. கட்டங்கட்டமாக முஸ்லிம் அதிகாரிகள் ஓரங்கட்டப்பட்டு வருகின்றனர். நிலைமை இன்னும் நீடிக்குமாக இருந்தால் கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் அதிகாரிகள் எவரும் பணி புரிய முடியாத நிலை ஏற்படலாம் என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் அச்சம் வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர் பதவிகளில் இருந்த முஸ்லிம் அதிகாரிகள் ஆளுநரால் அகற்றப்பட்ட செய்தியை ஏற்கனவே நான் பகிரங்கப்படுத்தியிருந்தேன். அந்த வரிசையில் தற்போது இலங்கை கல்வி நிர்வாக சேவை மூத்த அதிகாரி ஒருவர் எவ்வித பதவியும் வழங்கப்படாது இடமாற்றப்பட்டிருக்கிறார்.

கடந்த காலங்களில் கிழக்கு மாகாணத்தில் இருக்கும் 5 அமைச்சுக்களில் இரண்டு தமிழ் செயலாளர்களும், இரண்டு முஸ்லிம் செயலாளர்களும், ஒரு சிங்கள செயலாளரும் பணியாற்றி வந்தனர். இந்த மாகாணத்தின் இனச் சமநிலையைக் கருத்தில் கொண்டு இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தற்போது கிழக்கு மாகாணத்தில் எந்த ஒரு அமைச்சிலும் முஸ்லிம் செயலாளர்கள் இல்லை. முதலமைச்சு, சுகாதாரம், வீதி அபிவிருத்தி ஆகிய 3 அமைச்சுக்களிலும் தமிழ் செயலாளர்களும், கல்வி, விவசாயம் ஆகிய இரண்டு அமைச்சுக்களிலும் சிங்கள செயலாளர்களும் கடமை புரிகின்றனர். இது இந்த மாகாணத்தில் வாழ்கின்ற ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதித்துவத்தையும் கொச்சைப்படுத்துகின்ற செயற்பாடாகும். எனினும், எந்த அரசியல் தலைமையும் இதனைக் கண்டு கொண்டாதாகத் தெரியவில்லை.

இந்த வரிசையில் கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றிய சிரேஷ்ட கல்வி நிர்வாக சேவை அதிகாரியின் பதவி பறிக்கப்பட்டு எந்தவித பதவியும் வழங்கப்படாது அவர் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு உடன் செயற்படும் வண்ணம் இடமாற்றப்பட்டுள்ளார். அமைச்சு செயலாளர் பறிப்பு வரிசையில் இது மற்றுமொரு முஸ்லிம் பதவி பறிப்பு சம்பவமாகும். கிழக்கு மாகாணத்தில் சமீப காலமாக அரங்கேற்றப்படும் முஸ்லிம் விரோதப் போக்குகளின் மற்றுமொரு சம்பவம் இதுவாகும். நிலைமை இப்படியே நீடிக்குமாக இருந்தால் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் அதிகாரிகள் எவரும் பணி புரிய முடியாத நிலைமை ஏற்படுத்தப்படலாம்.

ரணில் – ராஜபக்ச ஆட்சியில் முஸ்லிம் விரோதப் போக்கு இன்னும் தொடர்கின்றது என்பதற்கு இவை சிறந்த உதாரணங்களாகும். எனவே. கிழக்கு மாகாண முஸ்லிம் சமூகம் விழித்தெழ வேண்டிய அவசர நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம் அரசியல் தலைமைகள் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகள் தொடர்பாக பேசுவார்கள் என்றெல்லாம் எதிர்பார்க்க முடியாது என்பது இவற்றின் மூலம் தெளிவாகத் தெரிகின்றது.

எனவே, முஸ்லிம் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், புத்தி ஜீவிகள், உலமாக்கள் என அனைவரும் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த விடயங்கள் சமூக மயப்படுத்தப்பட வேண்டும். அதன் மூலம் முஸ்லிம் சமூகம் இந்த அநீதிகளுக்கெதிராக ஒன்றுபடவேண்டும். முஸ்லிம் அதிகாரிகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று அவர் இவ்வாறு கூறினார்.

### சு.க...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

அம்மையார் எதுவித கருத்தும் தெரிவிக்காததால் கூட்டணி உருவாக்கம் சிக்கலில் உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

புதிய கூட்டணிக்கு தலைமை தாங்குமாறு சு.கவின் முக்கியஸ்தர்கள் பலர் சந்திரிகாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.அவரோ பதில் வழங்கவில்லை.

இதனால் கூட்டணியில் சேர விரும்புகின்ற கட்சிகள் சற்றுத் தயங்குகின்றன என்று சு.க வட்டாரத்தில் இருந்து அறிய முடிகிறது.

### நாடாளுமன்ற...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

ஜனாதிபதி தேர்தலை முதலில் நடத்தினால் அதில் தம்மால் வெல்ல முடியாது என்று ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறியுள்ள அவர்கள் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி தோல்வியடைந்தாலும் ஏனைய கட்சி எம்பிக்களை வளைத்துப்போட்டு நாடாளுமன்ற ஆட்சியை அமைக்கலாம் என்று தெரிவித்துள்ளனர்.

அப்படியென்றால் அது தொடர்பில் நாடாளுமன்றில் கொண்டுவரப்படும் யோசனைக்கு 113 எம்பிக்கள் ஆதரவு வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி அவர்களிடம் கூறியுள்ளார்.





# வீணன் புலம்பல்

இந்த வாரம் அரசியல் அரங்கில் பரப்பாகப் பேசப்பட்ட பல விடயங்களில் ஒன்று முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வெளியிட்டுள்ள புத்தகம்.

தான் ஜனாதிபதி பதவியில் இருந்து எப்படி விரட்டப்பட்டேன் என்று விவரித்து – அந்த விரட்டலுக்கு சர்வதேச சதிதான் காரணம் என்று தெரிவித்து – அவ்வாறான பல விடயங்களை உள்ளடக்கி அவர் அந்தப் புத்தகத்தை வெளியிட்டிருந்தார்.

அவர் விரட்டப்பட்டமைக்கு சர்வதேச சதியா காரணம் என்பது விவாதிக்கப்பட வேண்டிய விடயம். ஆனால்,தான் விரட்டப்பட்டது நியாயம்தான் என அவர் ஒப்புக்கொள்ள மறுத்துள்ளார்.

மக்கள் மாதக் கணக்கில் காலிமுகத்திடலில் முகாமிட்டு – கோடா கோ ஹோம் என்ற போராட்ட தளத்தை உருவாக்கி அதன் விளைவாகத்தான் கோத்தா விரட்டப்பட்டார்.

69 லட்சம் வாக்குகளால் தான் ஜனாதிபதியானேன் என்ற மமதை காரணமாக கோத்தா கண்டபடி ஆடத்தொடங்கினார். நாட்டை நிர்வகிக்கத் தெரியாமல் – பொருளாதாரத்தைக் காப்பாற்றத் தெரியாமல் தடுமாறத் தொடங்கினார்.

தனது தேர்தல் வெற்றிக்காக உதவிய நண்பர்களின் தேவைக்கு ஏற்ப பொருத்தாரத்தை மாற்றி அமைத்தார்.அந்த நண்பர்கள் சம்பாதிபதற்காக நாட்டு மக்களை பற்றி சிந்திக்காமல்–அவருக்கு வாக்களித்த அந்த 69 லட்சம் மக்களை பற்றியும் சிந்திக்காமல் தான் விரும்பியவாறு ஆடினார்.

நண்பர்களுக்காக சீனி வரியைக் குறைத்தார். இதனால் அரசுக்கு 1600 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டது.இதைவிடவும் மோசமாக விவசாயத்துக்கான இரசாயனப் பசளைக்குத் தடை விதித்து இயற்கை பசளைக்கு விவசாயத்தை மாற்றினார்.

இயற்கை விவசாயம் நல்ல விடயம்தான். ஆனால்,எடுத்த எடுப்பில் அதைச் செய்ய முடியாது.இரசாயன விவசாயத்தை செய்துகொண்டே இயற்கை விவசாயத்தை மேற்கொள்ள வேண்டும் என்று விவசாய நிபுணர்கள்–விவசாயிகள் உள்ளிட்ட பலரும் கூறியபோதும் அதை கோத்தா காதில் வாங்கவில்லை.

ஏதோ விவசாயத்தில் பாரிய புரட்சி செய்யப்போவதாகக் கூறிக்கொண்டு சிறுபிள்ளைத்தனமாக நடந்துகொண்டார்.இதனால் முழு விவசாயமும் பாதிப்புக்குள்ளானது. இயற்கை பசளையை சில விவசாயிகள் பாவித்தபோதும் அது வெற்றியளிக்கவில்லை. விளைச்சல் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. பொருட்களின் விலைகள் உயரத் தொடங்கின. விவசாயிகள் வருமானத்தை இழந்தனர்.இதனால் வீதிக்கு இறங்கிப் போராடினர்.

அத்தோடு, மேலும் பொருளாதாரம் வீழ்ச்சியடையத் தொடங்கியதும் டொலருக்குத் தட்டுப்பாடு.இதன் காரணமாக எரிபொபொருளை இறக்குமதி செய்வதற்கு டொலர் இல்லை. எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது.

பொருளாதாரத்தின் மூல சக்தியான எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதால் எல்லாத் துறைகளும் முடங்கின.மின் வெட்டு ஏற்பட்டது. ஒரு நாளைக்கு 12 மணித்தியாலத்துக்கும் மேலாக மின்சாரத்தை வெட்ட வேண்டியேற்பட்டது.

மின்சாரம் இல்லாததால் எல்லா தொழில்சாலைகளும் மூடப்பட்டன

மக்கள் கேஸுக்கும், எரிபொருளுக்கும் இரவு பகலாக எரிபொருள் நிலையங்களில் வரிசைகளில் நின்றனர்.இதனால் பல மரணங்களும் நிகழ்ந்தன.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக–அதனால் உண்டான மின்வெட்டு காரணமாக பொருட்களின் உற்பத்திகள் குறைந்து பொருட்களின் விலைகள் கிடுகிடுவென உயரத் தொடங்கின.

மக்கள் ஒரு பக்கம் தொழில்களை இழந்துகொண்டு செல்ல மறுபக்கம் பொருட்களின் விலைகள் அதிகரிக்கத் தொடங்கின.எல்லாமே மக்களின் கழுத்தை நெருக்கத் தொடங்கின.

இதனால் நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து கோத்தாவை விரட்டுவதற்குக் களமிறங்கினர். விரட்டினர்.இதுதான் நடந்தது. உலகமே அறிந்த விடயம்.

ஆனால், இப்போது வந்து தான் செய்யாத ஒரு குற்றத்துக்காக தன்னை சர்வதேசம் விரட்டியது என்று புலம்புகிறார்.தான் செய்த குற்றத்தை அப்படியே மூடி மறைத்துவிட்டார்.

இந்தப் புலம்பலை கேட்பதற்கும் அனுதாபப்படுவதற்கும் இப்போது மக்கள் தயாரில்லை. அவர் விரட்டப்பட்டதை மக்கள் சந்தோசமாக ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் இந்தப் புலம்பலை ஏற்பதற்கு எவரும் தயாரில்லை.

> **தனது தேர்தல் வெற்றிக்காக உதவிய நண்பர்களின் தேவைக்கு ஏற்ப பொருத்தாரத்தை மாற்றி அமைத்தார். அந்த நண்பர்கள் சம்பாதிப்பதற்காக நாட்டு மக்களை பற்றி சிந்திக்காமல்– அவருக்கு வாக்களித்த அந்த 69 லட்சம் மக்களை பற்றியும் சிந்திக்காமல் தான் விரும்பியவாறு ஆடினார்.**



# புனித ஹஜ்

# HAJJ 2024

ஹஜ்ஜுக்கான புதிவுகள் ஆரம்பம்



IATA

**36** வருட ஹஜ் உம்றா அனுபவத்துடன் இம்முறை புனித ஹஜ்ஜிற்காக அல்ஹாஜ் சையாப் அன்வர் அவர்களின் கண்காணிப்பில் ஹாஜிகளை அழைத்துச்செல்ல அனைத்து ஏற்பாடுகளையும் மிக சிறப்பாக செய்திருக்கிறது

**சப்ரா ட்ரவல்ஸ் & டுவர்ஸ்.**

**அஸீஸியா செல்வதில்லை மக்காவில் தங்குவது**

ஹஜ் பெகேஜில் அடங்குபவை

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- மினாவில் B Category Tent, தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விசா மற்றும் விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சிறப்பான சேவை.

**நீங்கள் எதிர்பாராத நியாய கட்டணம், நிறைவான சேவை**

எனவே காலம் தாழ்த்தாமல் உடன் பதிவுக்கு முந்துங்கள்!

**அல்ஹாஜ் சையாப் அன்வர்**

**0775046995 I 0777667152**

அல்ஹாஜ் ஜாபிர் - 0767007391

## Safra Travels & Tours (Pvt) Ltd

FLG - 4, Dias Place, Gnasinghapura, Colombo -12.
Tel: (0094) 0112 335699 I Fax: 0112335043
E- mail: safra_travels@yahoo.com





# HAJJ PILGRIMAGE 2024

# புனித ஹஜ்

47 ஆண்டுகால அனுபவமும், முத்த உலமாவும் ஹாஜிகளுக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து ஹஜ் உம்றாவுக்கு வழிகாட்டும் அல்ஹாஜ் மவ்லவி ஏ.எல்.எம்.கலீல் மதனி அவர்களின் நேரடி வழிகாட்டலில் ஹஜ்பயணிக்கும் வாய்ப்பு

நாம் வழங்கும் சேவை

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சொல்வதைப்போல் செய்யப்படும்.

As Sheikh M A M Masooth Ahmed (Hashimi) JP
077 9000 115
(Kattankudy)

As Sheikh M A Ibrahim (Gafoori)
077 42 39 389
(Colombo)

Al Haj Mishab JP
077 400 8485
(Negombo)

நியாய கட்டணம், நிறைவான சேவை, நேர்த்தியான வழிகாட்டல்

மேலதிக விபரங்களுக்கு:

**+94 777 909 377 I +94 777 918 978**

## BURAQUE TRAVELS (PVT) LTD

+94 11 267 8811
Info@buraque.lk
62,Dematagoda Road, Colombo -09 Sri Lanka

In Service
Over 3 Decades

IATA



# ஹஜ்

# HAJJ 2024

வாழ்நாளில் மறக்கமுடியாத பயணம்



**Our Services**

- Accommodation in Makkah ( 5 Star Hotel - Clock Tower)
  in Madinah ( 4 Star Hotel )
  in Mina Tent - B Category
- Sri Lankan Meals
- Luxury Ground Transport
- Visa with Insurance and Air Ticket
- Guidance By Ashsaik Suib Deeni

Luxury Package
Short Package



தரமான சேவையுடன் அஷ்ஷேக் சுஐப் தீனி அவர்களின் நேரடி வழிகாட்டலில் புனித ஹஜ்ஜை பூரண திருப்தியுடன் நிறைவேற்ற காலம் தாழ்த்தாமல் தொடர்புகொள்ளுங்கள்

For further details, contact:

**Alhaj Askar Aunn - 0777 03 15 23**
**Alhaj Aunn - 077 55 42 660**

## The Global Travels & Leisure Pvt Ltd

ஹஜ் உம்றா சேவை நிறுவனம்

No.653, Maradana (Next to Sampath Bank ) Colombo 10
Tel: 0117221876 I 0117221720 E-mail: askar@theglobal.lk



# புனித ஹஜ் 2024

இம்முறை புனித ஹஜ்ஜிற்காக ஹாஜிகளின் நலன் கருதி 3 பெகேஜ்களில் அழைத்துச் செல்ல அனைத்து ஏற்பாடுகளையும் மிக சிறப்பாக செய்திருக்கிறது.



**PAKAGE -A: 20,95,000/-**
முஅல்லிம் - B

**PAKAGE -B: 16,95,000/-**
முஅல்லிம் - C , Clock Tower

**SORT PAKAGE -B: 18,95,000/-**

நாம் வழங்கும் சேவை

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சொல்வதைப்போல் செய்யப்படும்.

**ரமழான்**
இறுதி 15 நாட்கள் உம்றா பெகேஜ்:
**749,000/-**

எனவே காலம் தாழ்த்தாமல் உடன் பதிவுக்கு முந்துங்கள்!

மேலதிக விபரங்களுக்கு:
அல்ஹாஜ் மௌலவி பைசல் பின்னூரி - 0777141151
அல்ஹாஜ் மௌலவி ஸகரியா இனாமி - 0777151156

# பின்னூரியா

ஹஜ் உம்றா சேவை நிறுவனம்

**BINNOORIYA HAJJ UMRAH SERVICE**

#204/01, Grandpass Road,Colombo-14. and Asna Super Market, Akurana.

# பேனா இன்றி வந்த அமைச்சர்



அண்மையில் அமைச்சர் ஜனக வகும்புர சூழலியல் அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார் அல்லவா.அப்போது நடந்த சுவாரசியமான சம்பவம்தான் இது.

அவர் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துவிட்டு சத்தியபிரமான பத்திரத்தில் கையெழுத்திடுவதற்காக பேனாவை எடுப்பதற்காக சட்டைப் பைக்குள் கையை விட்டார்.அதற்குள் பேனா இல்லை.

இதனால் அமைச்சர் தடுமாறத் தொடங்கினார்.இதை அவதானித்த ஜனாதிபதியின் செயலாளர் சமன் எக்கநாயக்க அவரது பேனாவைக் கொடுத்து உதவினார்.

எல்லாம் முடிந்ததும் அமைச்சரைப் பார்த்து ஜனாதிபதி ,கல்யாண வீ ட்டுக்குப் போகும்போது,கல்யாணத்துக்கு கையெழுத்திட செல்லும்போது,சத்திய பிரமாணம் செய்வதற்குச் செல்லும்போது பேனா இல்லாமல் போகக்கூடாது என்று அமைச்சருக்கு அறிவுரை கூறினார்.

அசடு வழிய சிரித்துக்கொண்டு நின்றார் அமைச்சர்.

# பாதுகாப்பு அமைச்சில் பிறந்த நாள் கொண்டாட்டம்

சில நாட்களுக்கு முன் பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாதுகாப்பு அமைச்சுக்கு சென்றபோது அங்கு பிறந்த நாள் கேக் ஒன்று வைக்கப்பட்டிருப்பதைக் கண்டார்.

இது யாருடைய பிறந்த நாள் என்பதை அறிந்துகொண்ட ஜனாதிபதி "" ஆ,,எங்கட பாதுகாப்பு ஆலோசகர் சாகலவுக்கு பேர்த் டேய் என "" என்று கூறி சாகலவுக்கு வாழ்த்து கூறினார்.

கேக் வெட்டி பிறந்த நாளை கொண்டாடினர்.

மேலும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிறந்த நாள் வாழ்த்துக்கள் வாட்சப் ஊடாகவும் ஏனைய ஊடகங்கள் ஊடாகவும் சாகலவுக்கு வந்தன,அத்தனைக்கும் அவர் பதில் வழங்கத் தவறவில்லை.





# நவீனுக்கு வெட்டு






ஜனாதிபதியின் குளியாபிட்டி கூட்டம் ஒன்று இடம்பெற்றது அல்லவா.அங்கு ஐக்கிய தேசிய கட்சியின் பல முக்கியஸ்தர்கள் பேசுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. அவர்களுள் முக்கியமானவர் வயம்பா ஆளுநர் நவீன் திஸாநாயக்க.

கூட்டம் இடம்பெற்ற அன்றைய தினம் பகல் 12 மணிபோல் நவீனின் செயலாளரும் ஊடக செயலாளரும் கூட்டம் இடம்பெறும் இடத்துக்குச் சென்று பேச்சாளர்களின் பட்டியலை சோதித்துப் பார்த்தனர்.

அதில் நவீனின் பெயர் இல்லை. ஐக்கிய தேசிய கட்சியின் செயலாளர் பாலித ரங்கேபண்டாரவிடம் இதுபற்றிக் கேட்டனர்.

நேரம் போதாமையால் நவீன் உள்ளிட்ட பலரின் பெயர்கள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்று பதிலளித்தார் பாலித.

செயலாளர்கள் இருவரும் நவீனிடம் இதைத் தெரிவித்தனர். அப்படியென்றால் நான் கூட்டத்துக்கு வரமாட்டேன்.என்று நவீன் கூறினார்.

அந்த செயலாளர்கள் இருவரும் ருவான் விஜயவர்தனவை சந்தித்து விடயத்தைக் கூறினர்.

ஆளுநருக்கு உரையாற்ற சந்தர்ப்பம் வழங்காமை நியாயமற்றது என்பதை உணர்ந்த ருவான் பாலித ரங்கேவிடம் நவீனுக்காக பரிந்து பேசினார்.

அப்போதும் சரிவரவில்லை.

ருவான் நவீனைத் தொடர்புகொண்டு கூட்டத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். இருந்தும்,நவீன் மறுத்துவிட்டார்.


# Laptop ஐ இதற்காக மட்டும் பயன்படுத்தும் எம்பி



எமது எம்பிக்கள் மக்களுக்கான அவர்களது சேவையைச் செய்வதற்கு வசதியாக சில வசதிகள் நாடாளுமன்றில் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

அவற்றுள் இலவச இணைய வசதி மற்றும் மடிக்கணினி வசதிகளும் அடங்கும். ஆனால்,சில எம்பிக்கள் அவற்றை சரியாக பயன்படுத்துகிறார்களா என்று பார்த்தால் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

சில எம்பிக்கள் மடிக்கணினிகளை போனை சார்ஜ் போடுவதற்கே பயன்படுத்து கிறார்கள். அண்மையில் எதிர்க்கட்சி எம்பி ஒருவர் அவரது போனை மடிக்கணினியில் சார்ஜ் செய்வதை ஊடகவியலாளர்கள் அவதானித்தனர்.



# ரொனியின் கடைசி ஆசையை நிறைவேற்றிய ஜனாதிபதி

சில நாட்களுக்கு முன் காலஞ்சென்ற ஐக்கிய தேசிய கட்சியின் பிரபல அரசியல்வாதி ரொனி டி மெலின் இறுதிக்கிரியைக்குச் சென்றிருந்தார் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க.

அப்போதுதான் ரொனியின் இறுதி ஆசை என்னவென்று அறிந்துகொண்டார் ஜனாதிபதி.

தான் மரணிக்கும்போது பதவியில் இருக்கும் ஜனாதிபதி தனது இறுதி கிரியையின்போது உரை நிகழ்த்த வேண்டும் என்பதுதான் அவரின் ஆசை.

அந்த ஆசையை ரொனி எழுத்து மூலம் பதிவு செய்திருந்தார்.அந்த ஆசையை நிறைவேற்றி வைத்தார் ரணில்.



# ஹரீனால் ரவிக்கு அதிஷ்டம்

இந்தக் கூட்டத்தில் பேசுவதற்கு ரவி கருணாநாயக்கவுக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. அவரது பெயரும் பேச்சாளர் பட்டியலில் இல்லை.இதைப் பார்த்த ரவி கொதித்துப் போனார்.

இந்த வேலையைப் பார்த்த பாலித ரங்கேமீது கடும் கோபத்தோடு காணப்பட்டார். இருந்தும்,அவருக்கு பேசும் வாய்ப்பு இறுதித் தருணத்தில் வழங்கப்பட்டது.

அதற்கு காரணம் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ.ஹரீன் அந்தக் கூட்டத்துக்கு வரவில்லை. அவரது பெயர் பேச்சாளர் பட்டியலில் இருந்தது.

ஹரீன் வராததால் அந்த சந்தர்ப்பம் ரவிக்கு வழங்கப்பட்டது.

# பசில் கொண்டுவந்த திட்டம்



பசில் ராஜபக்ஸ அமெரிக்காவில் இருந்தபோது அவர் அங்கு சும்மா ஓய்வெடுக்கவில்லை.இலங்கையின் அரசியல் நிலவரத்தை ஆராய்ந்துகொண்டு எப்படி ஆட்சியை மீண்டும் பிடிக்கலாம் என்றுதான் திட்டம் போட்டுக்கொண்டிருந்தார்.

ஒவ்வொரு நாளும் மொட்டு கட்சி முக்கியஸ்தர்கள்,கிராம மட்டத்திலான கட்சி நிர்வாகிகள் ஆகியோருடன் தொடர்பிலேயே இருப்பார்.

அவர்களுடன் பேசி அரசியல் களம்பற்றி அறிந்துகொள்வார்.

அவர் இரண்டு ஆய்வுகளையும் ரகசியமாக மேற்கொண்டார்.அதில் மொட்டு கட்சி தொடர்ந்தும் அரசில் இருப்பது மொட்டுக்கு நன்மையைத் தராது என்று ஓர் ஆய்வு கூறியது.

மற்றைய ஆய்வு மொட்டு கட்சிக்கு கிராம மட்டத்தில் 20 வீத செல்வாக்கு இருக்கிறது என்று சொல்கிறது.

இதனால் ஜனாதிபதி தேர்தலை விட நாடாளுமன்றத் தேர்தலுக்கு செல்வதுதான் தமக்கு சாதகமாக அமையும் என்று கருதி அந்தத் தேர்தலைத்தான் முதலில் நடத்த வேண்டும் என்ற திட்டத்தோடுதான் பசில் நாடு திரும்பினார்.

அதனை நோக்கித்தான் இப்போது பசில் செயற்படுகிறார் என்கிறது மொட்டு வட்டாரம்...

Q ஜனாதிபதி தேர்தலுக்கு முன் நாடாளுமன்றத் தேர்தலுக்குச் செல்வதற்கு வாய்ப்புகள் உண்டா?

Q இரண்டு தேர்தல்களும் இல்லாமல் போவதற்கு வாய்ப்புண்டு என்று சொல்லப்படுகிறதே?

Q நீங்கள் கூட்டமைப்பு அமைக்க விரும்புவது உங்களது கட்சியில் இருந்து பாய்ந்தவர்களை மீண்டும் இணைப்பதற்காகவா?

Q ஐக்கிய மக்கள் சக்தி மொட்டு கட்சியுடன் இணையுமா?

Q உங்களது அரசியல் செயற்பாடு அமைந்திருப்பது ஜேவிபிக்கு எதிராகவா?

Q உங்களது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார்?

Q மஹிந்த ராஜபக்ச,பசில் ராஜபக்ச போன்ற அனுபவம் வாய்ந்த – திறமையானவர்களை வைத்துக்கொண்டு கோத்தாபய ராஜபக்ச எப்படி தோல்வியடைந்தார்?



மூன்றில் இரண்டு பெரும் பான்மை ஒரு கட்சிக்கு வழங்கப்பட வேண்டுமா என்று மக்கள் யோசிக்க வேண்டும். அளவுக்கு அதிகமான அதிகாரம் கிடைத்ததால் நல்ல அரசு கூட வீழ்ச்சி யடைந்திருக்கிறது.

# நாடாளுமன்றத் தேர்தல்தான் முதலில் நடக்க வேண்டும்...

## மீண்டும் எம்பியாகும் ஆசை இல்லை:..

## அமெரிக்க பிரஜா உரிமையை கைவிடமாட்டேன்...

இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் மொட்டு கட்சியின் ஸ்தாபகரும் முன்னாள் எம்பியுமான பசில் ராஜபக்ச. அவரது முழுமையான பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி : எந்தத் தேர்தல் முதலில் ?**

பதில் : இதுபற்றி நான் ஜனாதிபதியுடன் பேசியதாக ஊடகங்கள் கூறின.உண்மையில் நான் அதுபற்றிப் பேசவில்லை.இந்த வருடம் ஏதாவது ஒரு தேசிய தேர்தல் இடம்பெறும்.

சட்டப்படி ஜனாதிபதி தேர்தல் இந்த வருடம் இடம்பெற வேண்டும்.அரசுக்குத் தேவையென்றால் அரசால் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த முடியும்.

கட்சியாக நாம் எந்தத் தேர்தலை நடத்த வேண்டும் என்று தீர்மானமெடுக்கவில்லை.

எனது தனிப்பட்ட கருத்து என்னவென்றால் முதலில் நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்றால் ஆரோக்கியமான நாடாளுமன்ற ஆட்சி ஒன்று அமையும் என்பதாகும்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஒரு கட்சிக்கு வழங்கப்பட வேண்டுமா என்று மக்கள் யோசிக்க வேண்டும்.

**கேள்வி : மூன்றில் இரண்டு பெரும்பான்மை வழங்குவது சரியில்லை என்றா சொல்கிறீர்கள் ?**

பதில் :ஜனாதிபதி பதவியும் நாடாளுமன்ற ஆட்சியும் ஓரிடத்தில் குவிந்து கிடப்பது நல்லதல்ல என்ற நிலைப்பாட்டுக்கு மக்கள் வந்துள்ளனர்.

அளவுக்கு அதிகமான அதிகாரம் கிடைத்ததால் நல்ல அரசு கூட வீழ்ச்சியடைந்திருக்கிறது.

இப்போதைய நிலவரப்படி,மக்கள் செல்வாக்கும் ஒழுங்குபடுத்தும் வலையமைப்பும் உள்ள ஒரேயொரு கட்சி மொட்டு கட்சிதான்.

ஐக்கிய மக்கள் சக்தியிடம் மக்கள் சக்தி உண்டு.அவர்களின் ஒழுங்குபடுத்தும் வலையமைப்பு பலவீனமானது.ஜேவிபியிடம் மக்கள் சக்தி இல்லை.அவர்களின் ஒழுங்குபடுத்தும் வலையமைப்பு பலமானது.

ஒரே இரவில் நாடு பூராகவும் போஸ்டர் ஒட்டக்கூடிய ஒரே கட்சி ஜேவிபி மட்டும்தான். அதைப் பார்த்துத்தான் நாமும் எமது ஒழுங்குபடுத்தும் வலையமைப்பை பலப்படுத்தினோம்.

ஜனாதிபதி பதவியை ஏற்பதற்கு இப்போதைக்குத் தகுதியுள்ளவர் என்று நான் கருதுபவர் இருக்கும் கட்சியிடம் அந்த இரண்டும் இல்லை.

இரண்டு விடயமும் உள்ளது எமது கட்சியிடம் மாத்திரம்தான்.

மூன்றாவது விடயம்தான் ஜனாதிபதியாகி நாட்டைக் கொண்டு செல்லக்கூடிய நல்ல தலைவர் இருக்க வேண்டும்.அதுதானே எமக்கு நடந்தது.

மேற்கூறிய முதல் இரண்டு அம்சங்களும் இருந்தும் மூன்றாவது அம்சம் இல்லாமல் போனதால் எம்மால் நாட்டைக் கொண்டு செல்ல முடியவில்லை.

ஆனால், ஐக்கிய தேசிய கட்சியில் மூன்றாவது அம்சம் உள்ளது.முன் சொல்லப்பட்ட இரண்டும் இல்லை. அதவாது, ஐக்கிய தேசிய கட்சியிடம் நல்ல வேட்பாளர் உள்ளார். ஆனால்,மக்கள் சக்தியும் ஒழுங்குபடுத்தும் வலையமைப்பும் இல்லை.

இந்த மூன்றையும் ஒன்றிணைப்பதுதான் என்னது எதிர்பார்ப்பு.இந்த மூன்றும் ஒன்றிணைந்தால்தான் நாட்டுக்கு நல்லது நடக்கும்.



**கேள்வி: அப்படியென்றால் இரண்டு அம்சம் உங்களிடம் உண்டு.ஒன்று ஐக்கிய தேசிய கட்சியிடம் உண்டு.அப்படியென்றால் நீங்கள் அந்தக் கட்சியுடன் கூட்டமைப்பு அமைக்கத் தயாரா?**

பதில்: அப்படி இல்லை.மூன்றும் ஒன்று சேர்ந்தால் நல்லது என்பதே எனது நிலைப்பாடு.இருந்தும்,ஏனையவர்களும் ஒன்றுசேர வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தி ஒன்றுசேருவது கஷ்டமான காரியம் அல்ல.அவர்கள் ஐக்கிய தேசிய கட்சியுடன் இருந்தவர்கள்தானே.

ஜேவிபிகூட சந்திரிக்காவின் அரசில் இருந்தது.2015 இல் நல்லாட்சி அரசை உருவாக்குவதற்கு உதவியது.அவர்களுடனும் ஒன்றுசேர்ந்து பணியாற்ற முடியும்.

**கேள்வி : இந்த மூன்று கட்சியையும் ஒன்றுசேர்ப்பதற்கு ஏதும் திட்டங்கள் உண்டா?**

பதில் : அதைச் சொல்ல முடியாது. யாராவது தலையிட்டு அந்த இணைப்பை மேற்கொள்ள வேண்டும்.நாட்டுக்காக நாம் எல்லாவற்றையும் மறந்து ஒன்றிணைந்து செயற்படத் தயார்.

**கேள்வி : ஜனாதிபதி தேர்தலுக்கு முன் நாடாளுமன்றத் தேர்தலுக்குச் செல்வதற்கு வாய்ப்புகள் உண்டா?**

பதில் : அதற்கான இயலுமை உண்டு. அதற்கு நாடாளுமன்றில் பெரும்பான்மை எம்பிக்கள் விருப்பம் தெரிவிக்க வேண்டும். எமது கட்சியில் இது தொடர்பில் தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை. ஜனாதிபதியைச் சந்தித்தபோதுகூட நான் இதுபற்றிப் பேசவில்லை.

நாடாளுமன்ற தேர்தலை நடத்துவதாக இருந்தாலும் ஜனாதிபதி தேர்தலை ஒத்திப்போடும் திட்டமாக அது இருக்கக்கூடாது.

**கேள்வி : இரண்டு தேர்தல்களும் இல்லாமல் போவதற்கு வாய்ப்புண்டு என்று சொல்லப்படுகிறதே?**

பதில் : அப்படி நடக்குமா இருந்தால் அதற்கு நாம் பூரண எதிர்ப்பு.நல்லாட்சியின்போது உள்ளூராட்சி சபைத் தேர்தல் இரண்டரை வருடங்களுக்கு ஒத்திப்போடப்பட்டது.

நாம் அப்போது அதற்கு எதிராக செயற்பட்டுத்தான் தேர்தலை நடத்த வைத்தோம்.இந்தத் தடவையும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒத்திப்போடப்பட்டுள்ளது. அதையும் எதிர்க்கிறோம்.

ஜனாதிபதி தேர்தலும் நாடாளுமன்றத் தேர்தலும் உரிய தினத்தில் நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உள்ளோம்.

**கேள்வி : நீங்கள் கூட்டமைப்பு அமைக்க விரும்புவது உங்களது கட்சியில் இருந்து பாய்ந்தவர்களை மீண்டும் இணைப்பதற்காகவா?**

பதில் : பிரிந்தவர்களை மீண்டும் இணைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் உள்ளேன்.அதற்காக ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும்.

**கேள்வி : ஐக்கிய மக்கள் சக்தி மொட்டு கட்சியுடன் இணையுமா?**

பதில் : அதைச் சொல்ல முடியாது. நாட்டுக்குத் தேவை என்றால்–மக்களுக்கு நல்லது நடக்குமென்றால் நாம் இணைவதற்குத் தயார்.

**கேள்வி : உங்களது அரசியல் செயற்பாடு அமைந்திருப்பது ஜேவிபிக்கு எதிராகவா?**

பதில் : அப்படி இல்லை.அவர்கள் கடந்த காலங்களில் எம்முடன் இணைந்து அரசியல் செய்திருக்கிறார்கள்.

**கேள்வி : உங்களது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் ?**

பதில் : கட்சி இது தொடர்பில் இறுதி முடிவெடுக்கும்வரை தமது தனிப்பட்ட நிலைப்பாட்டைக்கூட தெரிவிக்க வேண்டாம் என்று எமது கட்சியின் தலைவர் கூறி இருக்கிறார்.

**கேள்வி : நாடு பொருளாதாரரீதியில் வீழ்ச்சியடைந்தமைக்கு நீங்களும் காரணம் அல்லவா?**

பதில் : இல்லை.நான் இப்போதும் சொல்கிறேன் நாடு வங்குரோத்து நிலை அடையவில்லை என்று.நான் அப்போது நிதி அமைச்சராக இருந்துகொண்டு பல முயற்சிகளை எடுத்தேன்.கடன் இல்லாமல் கடன்களை செலுத்தி முடிக்க நடவடிக்கை எடுத்தேன்.

**கேள்வி :மஹிந்த ராஜபக்ச,பசில் ராஜபக்ச போன்ற அனுபவம் வாய்ந்த-திறமையானவர்களை வைத்துக்கொண்டு கோத்தாபய ராஜபக்ச எப்படி தோல்வியடைந்தார்?**

பதில் : அதுதான் எங்களுக்கும் இருக்கின்ற கேள்வி.கோத்தா அவரது புத்தகத்தில் அதற்கான காரணத்தை எழுதி இருக்கிறார். அவர் மட்டுமல்ல நாங்கள் எல்லோரும் தோல்வியடைந்தோம்.

இதற்கான காரணத்தை நாம் இன்னும் ஆராய்ந்து பார்க்கவில்லை. அதற்கான சூழல் இன்னும் அமையவில்லை.இருந்தும்,ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

**கேள்வி : அமெரிக்க பிரஜா உரிமையைக் கைவிடும் தேவை வந்தால் கைவிடுவீர்களா?**

பதில் : மீண்டும் நாடாளுமன்றத்துக்குச் செல்லும் விருப்பம் எனக்கு இல்லாததால் அமேரிக்கா பிரஜா உரிமையைக் கைவிடும் தேவை இல்லை.அதனால்தான் நான் எம்பி பதவியை இராஜினாமா செய்தேன்.

மீண்டும் நாடாளுமன்றத்துக்குச் செல்லும் நிலை வரக்கூடாது என்று பிரார்த்தனை செய்கிறேன்.என்றார்.




# மகளிர் தினத்தைக் கொண்டாடிய ராஜா ஜுவலர்ஸ்

தங்க நகை உலகில் நேர்த்தி மற்றும் விசேடத்துவம் பெற்று விளங்கும் ராஜா ஜுவலர்ஸ், சர்வதேச மகளிர் தினத்தைக் கோலாகலமாகக் கொண்டாடியது.இந்த அர்த்தமுள்ள கொண்டாட்டத்தில் பங்கேற்பதில் ராஜா ஜுவலர்ஸ் பெருமிதம் கொள்கிறது.

தமது வணிகத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் பெண்களின் விலைமதிப்பற்ற பங்களிப்பை மதிக்கின்ற ராஜா ஜுவலர்ஸ், பெண் கைவினைஞர்கள், வடிவமைப்பாளர்கள், முகாமையாளர்கள், பணிப்பாளர்கள், சந்தைப்படுத்துவோர் உள்ளிட்ட நகைத் துறையில் உள்ள பலதரப்பட்ட பாத்திரங்களை வகிப்பவர்களை கௌரவிக்கிறது.

ஆபரண கைவினைத்திறனானது, ஒரு பாலினத்துடன் மட்டுப்படுத்தப்படவில்லை என்பதோடு, பாலினத்தைப் பொருட்படுத்தாமல் தனிநபர்களின் திறமைகள் மற்றும் அர்ப்பணிப்பு மூலம் மேலோங்கி வளர்கிறது என்பதை இந்த கொண்டாட்டமானது கோடிட்டுக் காட்டுகிறது.

இந்த விசேட தினத்தைக் குறிக்கும் வகையில், ராஜா ஜுவலர்ஸ் உள்ளக மற்றும் வெளியக நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்தது..

மார்ச் 08 ஆம் திகதி, சர்வதேச மகளிர் தினத்தில், உள்ளக ஊழியர்களின் அர்ப்பணிப்பை மதிக்கும் வகையில் பிரத்தியேகமான கொண்டாட்ட நிகழ்வொன்று நடத்தப்பட்டது.

மார்ச் 09 ஆம் திகதி, ராஜா ஜுவலர்ஸ் காட்சியறைகளில் வாடிக்கையாளர்களுக்கு விசேட கொண்டாட்ட நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இங்கு அவர்கள் சர்வதேச மகளிர் தினத்துடன் ஒன்றரக் கலந்து, பிரத்தியேகமான தயாரிப்புகளின் அனுபவத்தைப் பெற்றனர்.

# நவலோக மருத்துவமனையின் நிதி ஸ்திரத்தன்மை வெளியீடு




இலங்கையின் முன்னோடி மற்றும் மிகப்பெரிய தனியார் மருத்துவமனை சங்கிலியான New Nawaloka Medical Center (Pvt) Ltd ஐ ஹட்டன் நேஷனல் வங்கியால் பரேட் சட்டத்தின் கீழ் கையகப்படுத்துவதைத் தடைசெய்யும் இடைக்காலத் தடை உத்தரவை பெப்ரவரி 28, 2024 அன்று, மேன்முறையீட்டு நீதிமன்றம், வழங்கியது.

நவலோக்க மருத்துவமனை குழுமத்தின் நிதி ஸ்திரத்தன்மை தொடர்பில் பல்வேறு தரப்பினரால் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்ட பொய்ப் பிரசாரங்கள் தொடர்பில் மருத்துவமனை குழுமத்தின் உயர்மட்ட நிர்வாகத்தின் கவனம் திரும்பியுள்ளது.

மருத்துவமனை குழுமத்தின் நிதி ஸ்திரத்தன்மை குறித்த ஆதாரமற்ற கூற்றுக்களை தாம் முற்றாக நிராகரிப்பதாகவும், இலங்கையின் முன்னோடி மற்றும் முன்னணி தனியார் மருத்துவமனை குழுவாக, இலங்கை மற்றும் சர்வதேச வாடிக்கையாளர்களின் நல்வாழ்வுக்கான அதன் உன்னத தேசிய பணியை தொடர்வதே அதன் முக்கிய நோக்கமாகும் என்றும் நவலோக்க மருத்துவமனை குழு தெரிவித்துள்ளது.

கடந்த 39 வருடங்களில் நவலோக்க மருத்துவமனை குழுமம் இலங்கை வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்களின் நம்பகமான தனியார் மருத்துவமனை வர்த்தக நாமமாக மாற முடிந்தது.

நவலோக்க மருத்துவமனை குழுமத்தால் சர்வதேச தரத்திலான சிகிச்சை வசதிகள் மற்றும் மிகவும் சிக்கலான சிகிச்சை முறைகளை இலங்கைக்கு அறிமுகப்படுத்த முடிந்தது.




# மக்கள் வங்கி கோடி அதிர்ஷ்டம் கோடீஸ்வர வெற்றியாளர் தெரிவு

"மக்கள் வங்கி பணம் அனுப்பல் சேவை கோடி அதிர்ஷ்டம் -2023" இன் மாபெரும் சீட்டிழுப்பில் ரூபா. 10 மில்லியன், ரூபா. 3 மில்லியன் மற்றும் ரூபா. 2 மில்லியன் பரிசுத் தொகைகளுக்கான வெற்றியாளர்களைத் தெரிவு செய்யும் நிகழ்வு மக்கள் வங்கியின், வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள் வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

2023 டிசம்பர் 10 முதல் 2023 டிசம்பர் 31 வரையிலான வாராந்த வெற்றியாளர்களும் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கான இலட்சாதிபதிகளும் நிகழ்வில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தமக்கும் தமது குடும்பங்களுக்கும் சிறந்த வாழ்க்கையை கட்டியெழுப்பி, நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த அயராது உழைக்கும் இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்காகவும், பாராட்டுவதற்காகவும் மக்கள் வங்கி "கோடி அதிர்ஷ்டம் 2023" சீட்டிழுப்பை ஆரம்பித்தது.

கிளைவ் பொன்சேகா – மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரிஃபொது முகாமையாளர், அஸ்ஸாம் ஏ. அஹமத் – நிதித் தலைவர், நிபுணிகா விஜயரத்ன – பிரதிப் பொது முகாமையாளர் (வங்கி ஆதரவு சேவைகள்), ஈ.ஏ.எம். திஸாநாயக்க – பிரதம உள்ளக கணக்காய்வாளர், நாலக விஜயவர்தன – சந்தைப்படுத்தல் தலைவர், அருணி லியனகுணவர்தன – உதவிப் பொது முகாமையாளர், வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள், ரேணுகா அருணாச்சலம் – பிரதம முகாமையாளர், வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள், திலினி பெரேரா – சிரேஷ்ட முகாமையாளர், வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள், விபுல வர்ணகுல – சிரேஷ்ட முகாமையாளர், தகவல் தொழில்நுட்பம், நதீஷா தென்னகோன் – முகாமையாளர், வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் சுதீர சமரசிங்க மேல்மாகாண வருமான வரித் திணைக்களத்தின் சிரேஷ்ட மதிப்பீட்டாளர் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# புற்றுநோய் சிகிச்சையில் புது மாற்றம்

இலங்கையில் முன்னணியில் உள்ள பல்வகைத் துறை கூட்டு நிறுவனமான DIMO நிறுவனத்தின் சுகாதாரப் பிரிவான DIMO Healthcare ஆனது, Siemens Healthineers இன் Varian நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்து, இலங்கையில் புற்றுநோய் தொடர்பான கதிர்வீச்சு (Radiation Oncology) நடவடிக்கை மருத்துவ நிபுணர்களுக்காக அதிநவீன சிகிச்சை தீர்வுகளை அறிமுகப்படுத்துகின்றன.




புற்றுநோயியல் (Oncology) துறையில் உலகளாவிய ரீதியில் முன்னணியில் உள்ள ஏயசயைெ நிறுவனம், தனது நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி, புத்தாக்கமான புற்றுநோய் சிகிச்சைத் தீர்வுகளை வழங்குகிறது.

மஹரகம அபேக்ஷா, ஆசிரி சேர்ஜிகல் (கொழும்பு 05), செலிங்கோ புற்றுநோய் மையம் (கொழும்பு 02) ஆகிய வைத்தியசாலைகளில் பயன்படுத்தப்படும் ஏயசயைெ இன் தொழில்நுட்பங்கள், ஏற்கனவே இலங்கையில் கணிசமான வகையில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.

இந்த கூட்டாண்மையானது, நாடு முழுவதும் மேம்பட்ட புற்றுநோய் சிகிச்சைக்கான அணுகலை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

DIMO நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும், DIMO Healthcare பிரிவைக் கண்காணிப்பவருமான விஜித் புஷ்பவெல இது பற்றி தனது கருத்தைத் தெரிவிக்கையில். "மேம்பட்ட புற்றுநோய் சிகிச்சைக்கான அணுகலானது, ஒரு விசேட உரிமையாக இருக்கக்கூடாது.

ஒவ்வொரு இலங்கையரும் மேம்பட்ட புற்றுநோய் சிகிச்சைக்கான அணுகலை பெறுவதற்கான வாய்ப்பை கொண்டிருக்க வேண்டும் என நாம் நம்புகிறோம்.

ஏயசயைெ உடனான இந்த கூட்டாண்மையானது, அதிநவீன தொழில்நுட்பத்தை வழங்குவது மட்டுமல்லாது, ஆரோக்கியமான தேசத்தை கட்டியெழுப்புவதற்கான கனவுகள் மற்றும் அபிலாஷைகளை வலுவூட்டும் நடவடிக்கையாகும்." என்றார்.2

# Bachelor of Business Administration அறிமுகம்



நீண்ட காலமாக இலங்கையின் சுகாதாரக் கல்வித் துறையின் முன்னோடியாக திகழும் International Institute of Health Sciences (IIHS) நிறுவனம் புதிதாக டீயஉாநடழச ழக Business Administration (BBA) பட்டப்படிப்பு பாடநெறியை அறிமுகப்படுத்தியுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் அங்கீகாரத்துடன் கூடிய மேற்படி பாடநெறி ஊடாக சுகாதாரக் கல்வி நிறுவனமொன்றின் தனித்துவமான நிபுணத்துவத்தையும் பெற்றவாறு வர்த்தக நிர்வாகத் துறையின் தகைமைகளை பூர்த்தி செய்துக்கொள்வதற்கான வாய்ப்பு மாணவர்களுக்கு கிடைக்கின்றது.

ஆராய்ச்சிகள் மற்றும் உள்ளக பயிற்சிக்கு கூடுதல் கவனம் செலுத்தும் வகையில் 120 Credits கொண்ட பரந்தளவிலான பாடவிதானங்களை கொண்ட இப் பாடநெறி ஊடாக வர்த்தக உலகில் காணக்கூடிய சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு தேவையான அறிவையும் அனுபவத்தையும் மாணவர்களுக்கு அளிப்பதற்கு IIHS நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறான பல்வகை கல்வி பாடநெறிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் ஒன்றுக்கொன்று மாறுபட்ட துறைகளுக்கு பிரவேசிப்பதற்கு தேவையான அறிவையும் ஆற்றலையும் கொண்ட மாணவர்களை உருவாக்குவதே IIHS நிறுவனத்தின் எதிர்பார்ப்பாகும்.

இப் பாடநெறி சிறப்பு மருத்துவ நிபுணர் கித்சிறி எதிரிசிங்க அவர்களின் தலைமையில் முன்னெடுக்கப்படுகின்றது. சுகாதாரத் துறை தொடர்பாக அவருக்குள்ள பரந்தளவிலான அறிவு மற்றும் அனுபவத்துடன் ஒழுக்கநெறிகள், சமூகப் பொறுப்பு மற்றும் புத்தாக்கம் போன்ற விடயங்கள் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு இப் பாடநெறியை முன்னெடுக்க முடியுமென ஐஐஉளு நிறுவனம் தெரிவித்துள்ளது.

# தொழில் வழங்குநர்கள் கௌரவிப்பு




CIMA தலைவர் சாரா கோஷ், ஆசிய பசுபிக் பிராந்திய பிரதித் தலைவர் வெங்கட் ரமணன் மற்றும் இலங்கைக்கான முகாமையாளர் ஸஹாரா அன்சாரி ஆகியோர் தரப்படுத்தலில் முதலிடம் பெற்ற MAS Holdings ஐக் கௌரவிக்கின்றனர். MAS Legato இன் பிரதம நிறைவேற்று அதிகாரி சுரங்க நாணயக்கார அவர்கள் விருதை ஏற்றுக்கொண்டார்.

9 மார்ச் 2024, கொழும்பு, இலங்கை – சர்வதேச சான்றளிக்கப்பட்ட தொழில்சார் கணக்காளர்கள் சங்கம் (Association of International Certified Professional Accountants) என்ற ரீதியில் AICPA மற்றும் CIMA ஆகியன ஒன்றிணைந்து, தம்முடைய 2024 உச்ச தொழில்தருநர்கள் (Top Employers) பட்டியலில், இலங்கையில் கணக்கியல் மற்றும் நிதி தொழில் சார்ந்தவர்களுக்கு மிகவும் கவர்ச்சியான நிறுவனங்களின் பெயர்களை வெளியிட்டுள்ளன.

AICPA மற்றும் CIMA உச்ச தொழில்தருநர்கள் பட்டியல், இலங்கையில் கணக்கியல் மற்றும் நிதி தொழில் சார்ந்தவர்கள் தமது தொழில்களில் செழிப்படையும் வகையில் அவர்கள் தம்மைக் கட்டியெழுப்ப உதவுவதில் முன்னின்று ஆதரவளித்து வருகின்ற நிறுவனங்களுக்கு அங்கீகாரமளிக்கும் முகமாக தோற்றுவிக்கப்பட்டது. 2024 மார்ச் 8 அன்று கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலின் பிரதான நிகழ்வு மண்டபத்தில் இடம்பெற்ற CIMA தலைவரின் வரவேற்பு விருந்துபசார நிகழ்வில் இந்நிறுவனங்களுக்கான அங்கீகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.



# இலங்கையின் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையில் புரட்சி

இலங்கை 2042 ஆம் ஆண்டளவில் 70% புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தியை இலக்காகக் கொண்டுள்ளது என, ஐந்து மாதங்களுக்கு முன்பாக, கடந்த ஒக்டோபர் 2023 இல் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவித்திருந்தார்.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தியை அதிகரிப்பதற்கான நாட்டின் தேசிய ஆர்வமானது, மின்சக்தியில் தன்னிறைவு மற்றும் உயிர்ப் பல்வகைமை பாதுகாப்பிற்கான இயற்கையை அடிப்படையாகக் கொண்ட தீர்வுகளின் ஒரு பகுதியாகும்.

இலங்கையின் தற்போதைய மின்சக்தி உற்பத்தியானது, அதன் அரைவாசிக்கும் மேற்பட்டவை (54%) பெற்றோலிய எரிபொருட்களாலும் நிலக்கரியினாலும் பூர்த்தி செய்யப்படுகின்றன என்பதைக் காட்டுகின்றது.

பெற்றோலியம் மற்றும் நிலக்கரி இறக்குமதிக்கு செலவிடப்படும் பெறுமதி வாய்ந்த அந்நியச் செலாவணியானது, பொருளாதார மீட்சியடைய மிகவும் போராடி வரும் இலங்கைக்கு ஒரு பாரிய சுமையாகும் என்பதோடு, ஏற்றுமதி வருமானத்தின் பாரிய அளவை அது எடுத்துக் கொள்வதை காட்டுகிறது.

34% மின்சக்தித் தேவைகள் கனிய எரிபொருட்களாலும், 8% பிரதான நீர் மின்சார மூலங்களிலிருந்தும், வெறுமனே 4ூ ஆனது புதுப்பிக்கத்தக்க வலுசக்தியிலிருந்தும் பூர்த்தி செய்யப்படுகிறது என்பதையும் தேசிய மின்சக்தி உற்பத்தித் தரவுகள் குறிப்பிடுகின்றன.

இலங்கையின் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (PUCSL) இந்த மோசமான சூழ்நிலையை உணர்ந்து, மின்சக்தி பாதுகாப்பைப் பேணுவதற்காக, புதிய நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்களை நாட்டில் அமைக்கக்கூடாது என வலியுறுத்தியுள்ளது. ஒட்டுமொத்த மின்னுற்பத்தி கலவையில் புதுப்பிக்கத்தக்க மின்சக்தியின் பாரிய பங்கை நோக்கி செல்ல வேண்டுமெனவும் அது வலியுறுத்துகிறது.

# உறுதியான வளர்ச்சிக்கு தயாராகும் ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் கோர்பரேஷன்





ஸ்ரீலங்கா இன்ஷீரன்ஸ் கோர்பரேஷன் லிமிடெட் (SLIC) நிறுவனத்தின் பொதுக் காப்புறுதி சேவைகள் வழங்கும் துணை நிறுவனமான ஸ்ரீ லங்கா இன்/ரன்ஸ் கோர்பரேஷன் ஜெனரல் லிமிடெட் (SLICGL), 2024 பெப்ரவரி மாதம் 1ஆம் திகதி உத்தியோகபூர்வ வகைப்படுத்தலுக்கு உட்பட்டிருந்ததைத் தொடர்ந்து வளர்ச்சி மற்றும் புத்தாக்கம் தொடர்பான புதிய கட்டத்தில் பிரவேசிக்க தயாராகியுள்ளது.

SLICGL இன் நிலைப்பாடு தொடர்பில் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சந்தன எல். அளுத்கம கருத்துத் தெரிவிக்கையில், “62 வருட காலமாக வெற்றிகரமாக இயங்கிய பின்னர், ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதி சேவைகளை வேறாக்கம் செய்வது தொடர்பான தீர்மானத்தினூடாக, எமது வியாபார மூலோபாயங்களில் எமக்கு பெருமளவு கவனம் செலுத்த முடிந்துள்ளதுடன், வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றும் போது மேம்படுத்தப்பட்ட வினைத்திறனை வெளிப்படுத்தக்கூடியதாக இருக்கும்.

இந்த முக்கிய நிலையை புரிந்து கொண்டு, ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளை நாம் பூர்த்தி செய்துள்ளதுடன், சந்தைப் போக்குகளை பின்பற்றி, 2018 ஆம் ஆண்டு முதல் வேறாக வகைப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை முன்னெடுக்க ஆரம்பித்தோம்.” என்றார்.

அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில், “எனவே, 2024 ஆம் ஆண்டு சட்டபூர்வமான வகையில் நாம் வகைப்படுத்தப்பட்டாலும், ஏற்கனவே நாம் பின்பற்றியிருந்த வேறாக்கப்பட்ட செயற்பாடுகளின் பெறுபேறுகளை அவதானிக்க ஆரம்பித்துள்ளோம்.

உதாரணமாக, தொழிற்துறை மற்றும் தேசிய சவால்கள் காணப்பட்ட போதிலும், 2023 ஆம் ஆண்டில் SLICGL இனால் சிறந்த வளர்ச்சியை பதிவு செய்ய முடிந்திருந்ததுடன், இதனூடாக எமது சாதனைகளை வெளிப்படுத்தி, பொது காப்புறுதித் துறையில் காணப்படும் வாய்ப்புகளை மேம்படுத்திக் கொள்ள முடிந்துள்ளது.” என்றார்.

# Pre-owned சொகுசு வாகனங்களுக்கு CARPITAL ஆலோசனை சேவை



இலங்கையின் வாகனத் துறையில் நீண்ட கால முன்னோடி நிறுவனமாகத் திகழும் DIMO, தனது DIMO CERTIFIED மூலம், பயன்படுத்தப்பட்ட (Pre-owned) ஆடம்பர கார்களை கொள்வனவு செய்பவர்களுக்கும் விற்பனை செய்பவர்களுக்கும் CARPITAL ஆலோசனை சேவையை சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது.

CARPITAL மூலம், கொள்வனவாளர்களுக்கும் விற்பனையாளகளுக்கும் தங்கள் Pre-owned சொகுசு கார்களுக்கு சரியான முதலீட்டு முடிவை எடுக்க வழிகாட்டப்படுகிறது.

இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் அதிகரிக்கும் வாகன சந்தைப் பெறுமதி ஆகியன, Pre-owned சொகுசு கார் துறையில் பல்வேறு சவால்களை ஏற்படுத்தியுள்ளதோடு, CARPITAL மூலம் ஆபத்தற்ற, 100ூ வெளிப்படையான பரிவர்த்தனைகள் மூலம் வாகனம் வாங்குதல் மற்றும் விற்பனை செய்யும் செயன்முறை முழுவதும், நிபுணர் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளை வழங்குகிறது.

DIMO நிறுவனத்தின் பயணிகள் வாகன விற்பனைப் பிரிவின் பொது முகாமையாளர் தரங்க குணவர்தன இது பற்றி கருத்துத் தெரிவிக்கையில், "Pre-owned சொகுசு வாகனச் சந்தையில், முடிவெடுக்கும் விடயம் தொடர்பில், ஒரு தனித்துவமான பங்களிப்பை CARPITAL வழங்குகிறது.

அனுபவம் வாய்ந்த சொகுசு வாகன விற்பனை நிபுணர்களான எமது CARPITAL ஆலோசகர்கள், சொகுசு வாகனங்களின் சந்தை மதிப்புகள் அதிகரித்துள்ள முக்கியமான காலங்களில், எமது வாடிக்கையாளர்கள் Pre-owned சொகுசு வாகனங்களில் மேற்கொள்ளும் முதலீடுகளை அதிக இலாபம் ஈட்டுவதற்காகவும், உயர் பலன்களை பெறுவததனை நோக்காகக் கொண்டு, உரிய ஆலோசனை சேவைகளை வழங்குகின்றனர்.” என்றார்.

# EntreMindz Season 3க்கு அமானா வங்கி அனுசரணை

அடுத்த தலைமுறை தொழில்முனை வோரை கட்டியெழுப்பும் வகையில், அறிவு, அனுபவங்கள் மற்றும் உள்ளார்ந்த அம்சங்கள் ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில், ருவுமு நுனரஊழளெரடவ இனால் ஏற்பாடு செய்யப்படும் நுவெசநஆனைெண பருவம் 3க்கான அனுசரணையை வழங்க அமானா வங்கி மீண்டும் முன்வந்திருந்தது.

Gen Z தலைமுறையினரின் தொழில்முனைவோர் மனநிலையை திறக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்ட EntreMinds season 3 இல், 15 மற்றும் 20 வயதுக்குட்பட்ட 35 அணிகள் பங்கேற்று, தமது பிரத்தியேகமான வியாபாரத் கருத்திட்டங்களை நிபுணத்துவ நடுவர் குழுவினர் முன்னிலையில் முன்வைத்திருந்தனர்.

இதில் சன்ன குணவர்தன (பிரதம நிறைவேற்று அதிகாரி தங்கொட்டுவ போர்சலேன்), அஜித் கதிர்காமர் (சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் தலைமை அதிகாரி - Aqcellar), சித்தீக் அக்பர் (உப தலைவர் நுகர்வோர் வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் - அமானா வங்கி), அப்துல் கரீம் (பிரதம நிறைவேற்று அதிகாரி - Inotrend International), இஷ்ரத் ரவுப் (முகாமைத்துவ பணிப்பாளர்ஃபிரதம நிறைவேற்று அதிகாரி - Adl Capital) மற்றும் ஷரிகா முபாரக் (இணை ஸ்தாபகர் மற்றும் தலைவர் - Aqcellar South East Asia) ஆகியோர் அடங்கியிருந்தனர்.

ஆரம்ப போட்டி விளக்கமளிப்பின் போது, புகழ்பெற்ற தொழில்முனைவரும், ஐக்கிய அமெரிக்காவின் முதலீட்டாள ருமான ஆரென் கொல்பின் பிரதான உரையை ஆற்றியிருந்தார்.புகழ்பெற்ற



தொழில்முனைவரும், பெண் தொழில்முனைவருமான நயோமி ஹந்துன்னெத்தியும், தமது கருத்துக்களை, மெய்நிகரான முறையில் பங்கேற்றிருந்த சுமார் 200 பேர் மத்தியில் பகிர்ந்திருந்தார்

அனுபவம் வாய்ந்த நடுவர் குழுவினருக்கு மேலதிகமாக, தமது நிபுணத்துவம் மற்றும் ஆலோசனைகளை பகிர்ந்து கொண்ட அனுபவம் வாய்ந்த தொழில்முனைவோரில், AICPA & CIMA இலங்கை மற்றும் மாலைதீவுகளின் முகாமையாளர் சஹாரா அன்சாரி, Stache Brunch & Bistro ஸ்தாபகர் தாஷியா டி சில்வா, டிஜிட்டல் சந்தைப்படுத்தல் மூலோபாய வடிவமைப்பாளர் அர்ஷ ாத் மொஹைதீன், EMZ 2022 இன் சிறந்த வெளிப்படுத்துனராக தெரிவு செய்யப்பட்ட அக்லாக் கசாலி ஆகியோரும் அடங்கியிருந்தனர்.

இந்த பங்காண்மை தொடர்பில் அமானா வங்கியின் நுகர்வோர் வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவின் உப தலைவர் சித்தீக் அக்பர் குறிப்பிடுகையில், "அனுபவம் வாய்ந்த தொழில்முனை வோரிடமிருந்து அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு மேலான நிகழ்வாக இது அமைந்திருந்தது. அடுத்த தலைமுறை வியாபார தலைவர்களை ஊக்குவித்து மேம்படுத்துவதற்கான அடித்தளத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

வளர்ந்து வரும் தொழில்முனைவோரை ஊக்குவித்தல் மற்றும் உதவியளித்தலில் அமானா வங்கி தொடர்ச்சியாக முன்னிலையில் திகழ்வதுடன், நுவெசநஆனைெண உடனான கைகோர்ப்பு என்பது, இளம் தூர சிந்தனைகளைக் கொண்ட வியாபாரத் தலைவர்களுக்கு வலுவூட்டுவதற்கான தமது அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தியுள்ளது." என்றார்.

# பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு வலுவூட்டும் பயிற்சிப் பட்டறைகள்




2024 ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தை நினைவுகூரும் வகையில், இலங்கையில் பெண் வணிக உரிமையாளர்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு முயற்சியை TikTok மேற்கொண்டுள்ளது.

வளர்ந்து வரும் சந்தைகளில் பெண்கள் தலைமையிலான வணிகங்கள் எதிர்கொள்ளும் தனித்துவமான சவால்களை உணர்ந்து, வுமைவுழம ஒரு பிரத்யேக பயிற்சிப் பட்டறை திட்டத்தை வடிவமைத்துள்ளது, அங்கு வணிக வளர்ச்சி மற்றும் தெரிவுநிலைக்கான தளத்தை மேம்படுத்துவதற்கான விரிவான வழிகாட்டுதலை வழங்குவதற்காக தகவல் வலைதளங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

நிறுவன வெற்றியில் டிஜிட்டல் தளங்கள் முக்கிய பங்கு வகிக்கும் சகாப்தத்தில், பல சிறு வணிகங்கள், குறிப்பாக பெண்களால் வழிநடத்தப்படும், டிஜிட்டல் கல்வியறிவு, வளங்கள் மற்றும் ஆதரவு வலைதளங்களுக்குகள் இல்லாததால் குறிப்பிடத்தக்க தடைகளை எதிர்கொள்கின்றன.

வெற்றிக்கு தேவையான உந்துதல் மற்றும் புத்தாக்கங்கள் இருந்தாலும், இந்த தடைகள் போட்டி ஆன்லைன் சந்தையில் womeninbusiness முன்னேற்றமடைந்து வருவதை தடுக்கிறது.

மார்ச் 1 முதல் மார்ச் 20, 2024 வரை இயங்கும் 20 நாள் பயிற்சிப் பட்டறைத் திட்டம், உள்ளடக்க உருவாக்கம் (Content Creation) உத்தி உருவாக்கம் (Strategy Building), கதைசொல்லல் மற்றும் TikTok இல் தயாரிப்பு அம்சங்களை திறம்பட பயன்படுத்துதல் ஆகியவற்றின் முக்கிய அம்சங்களை உள்ளடக்கும்.



# முடி மற்றும் தோல் பராமரிப்பு செயலமர்வு

இலங்கையில் Pharmaceris Haircare மற்றும் Skincare தயாரிப்புகளின் ஒரே அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியான JL Euro Solutions, சமீபத்தில் ஹில்டன் கொழும்பு ரெசிடென்ஸில் தலைமுடி மற்றும் தோல் பராமரிப்புத் தீர்வுகள் பற்றிய செயலமர்வை நடத்தியது.

இந்த நிகழ்வின் போது, Pharmaceris ஐச் சேர்ந்த நிபுணர்கள், அலோபீசியாவுக்காக இலங்கையில் உள்ள சிகிச்சை முறைகள் தொடர்பில் தங்களது அறிவு மற்றும் நிபுணத்துவம் என்பவற்றை பகிர்ந்து கொண்டனர்.

அலோபீசியா என்பது பொதுவாக முடி உதிர்தல் பிரச்சனையாகும். இது இலங்கையர்களிடையே நடுத்தர மற்றும் வயதானவர்களிடம் அதிகளவில் வளர்ந்து வரும் ஒரு பிரச்சினையாகும்.

முடி உதிர்தல் ஆனது ஒரு நபரின் உள மற்றும் உணர்வின் ஆரோக்கியத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்று ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

ஏனெனில் முடி உதிர்வதால் கவர்ச்சியற்ற தன்மை ஏற்படுமோ என்கின்ற உணர்வுப் போராட்டங்களால் சில சமயங்களில் அது மனச்சோர்வுக்கு கூட வழிவகுக்கலாம். மேலும் இது சுயமரியாதை பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடியதால் தனிநபரின் வாழ்க்கை முறையையும் பெரிதும் சீர்குலைக்கலாம்.

# Nutririch இயற்கை பால் மா அறிமுகம்




பிழையான உணவு பழக்கம் காரணமாக புதுவிதமான நோய்கள் மலிந்து காணப்படும் இன்றைய சூழலில்,அதிலிருந்து தப்புவதற் காக சிறுவர் முதல் பெரியவர் வரை இயற்கையான -ஆரோக்கியமான உணவு பழக்கங்களை பின்பற்ற வேண்டும் என்ற நோக்கில; Eravur Go Green வர்த்தக நிறுவனத்தால் பல சத்துணவு வகைகள் தயாரிக்கப்படுகின்றன.

நிறுவனத்தின் 26 வகை உற்பத்திகளில் முதலாவது வகையான Nutririch என்ற பால்மா வகை இப்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த பால் மாவில் இந்தியாவில் மாத்திரம் கிடைக்கக்கூடிய-அன்று மன்னர்கள் உண்ட கறுப்பு கவுமி அரிசி,கம்பு,முழு கோதுமை,ப யறு,கடலை,பாதாம்,பிஸ்தா,கறுப்பு கடலை,கறுப்பு கொண்ட கடலை,பொட்டு கடலை போன்ற அதிக சக்தி வாய்ந்த பொருட்கள் தேவையான விகிதத்தில் உணவு நிபுணர்களின் ஆலோசனைப்படி சேர்க்கப்பட்டுள்ளன.

உரிய விகிதத்தில் போசணை சேர்க்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டு அதற்கான பரிசோதனை கூடத்தால் ஜ டயடி ஸ சான்றிதழும் இந்த உற்பத்திக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உங்கள் குழந்தைகளின் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். நோய்களில் இருந்து பாதுகாத்திடுங்கள்.

# HUTCHஆல் கிராமப்புற பாடசாலைகளுக்கு e-bike அன்பளிப்பு




சிறுவர்கள் மற்றும் கல்வித்துறையில் நேர்மறையான விளைவை ஏற்படுத்தும் முயற்சிகளில் நிறுவனம் கவனம் செலுத்தியுள்ளமைக்கு அமைவாக, இலங்கையில் கிராமப்புற பாடசாலைகள் மற்றும் அவற்றின் பணியாளர்களுக்கு கல்வி அமைச்சின் கூட்டாண்மையுடன் இணைந்து மின்சாரத்தால் இயங்கும் 130 சைக்கிள்களை (e-bike) நன்கொடையாக வழங்கும் ஒரு மகத்தான முயற்சியை மேற்கொண்டுள்ளது.

"நிலைபேணத்தகு போக்குவரத்தினூடாக கல்வியை மேம்படுத்தல்" என்ற பெயரிலான இந்த முயற்சி, தொலை தொடர்பாடல் சேவைகளை வழங்குவதற்கும் அப்பால், பரந்த அளவில் சமூக மேம்பாட்டை கணிசமாக வளர்ப்பதில் ஹட்ச் நிறுவனத் தின் அபிலாஷைகளை பிரதிபலிக்கின்றது.

இலங்கையில் கல்வியை மேம்படுத்தி, தரம் உயர்த்துதல் மற்றும் இது தொடர்பில் அரசாங்கத்தின் நோக்கத்திற்கு உதவுவதல் ஆகியவற்றில் ஹட்ச் நிறுவனத்தின் அர்ப்பணிப்பையும் இது அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.